மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, அதாவது மாநில அரசாங்கத்திலே உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு சம்பள விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கேள்விக்கு நான் விடையளிக்க வேண்டியதில்லை. கார்ப்பொரேஷனில் பணியாற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் அதாவது ஸ்டெனோகிராபர்ஸ் ஆகியவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அதிகம் இல்லை. அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு இருக்கிறது. கார்ப்பொரேஷனில் பணியாற்றுபவர்களுக்கு இந்தப் பதவி உயர்வு வாய்ப்பு இல்லையென்று 1964-ல் இருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த அளவில் கொடுத்தால்தான் இம்மாதிரியான வேலைக்கு வருகிறார்கள். இல்லாவிடில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமை நீடித்து வருகிறது.

உதகை நகராட்சி மன்றம்

*** 125 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 12—3—1969-ல் நடைபெற்ற உதகை நகராட்சி மன்றக் கூட்டத்தில் எல்லா உறுப்பினர்களும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனரா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அந்நாள் ஆணையரது போக்கைக் கண்டிக்கும் வகையில் வெளிநடப்பு நிகழ்ந்தது. அவ்வாணையர் வேறிடத்துக்கு தற்பொழுது மாற்றப்பட்டிருக்கிறார்.

Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act

***126 Q.–Dr. H. V. HANDE, Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR and Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that this Government has constituted a five-member committee to examine the provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act and make suitable suggestions for amendment; and

(*b*) the details thereof and the terms of reference ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1960-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்து, தகுந்த திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்து வழங்க அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உள்துறையின் அரசுச்செயலாளர் இக்குழுவின் தலைவராவார். இடவசதிக் கட்டுப்பாடு குறித்து பொறுப்பு வகிக்கும் உள்துறை துணைச் செயலாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார். சட்டத்துறையின் அரசுச் செயலாளர், சென்னையிலுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு அதிகாரி, சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சென்னையிலுள்ள அரசு வழக்குரைஞர் ஆகியவர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

இந்தக் குழு 1960-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் நியாய வாடகையை முடிவு செய்வதற்கான கோட்பாடுகளை மாற்றியமைப்பது குறித்து ஆய்வு செய்து, 4-ம் பிரிவிற்குத் திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்துரைகளை வழங்குவதோடு, 3-வது பிரிவில் கண்டுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு விதித்துறைகள் உட்பட இந்தச் சட்டம் முழுவதும் செயல்படுவதை மதிப்பிட்டு, 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குப் பிறகு இந்தச் சட்டத்